(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 5th Term Examination - 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருளியல் - I<br>Economics - I | Two Hours<br>Gr : 13 (2023) | 21 | T | I |

**அறிவுறுத்தல்கள் :-**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி – I

01) பின்வருவனவற்றுள் எது அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளை (Basic Economic activities) சரியாக வெளிப்படுத்துவது.
   (1) உற்பத்தி, பரிமாற்றம், கேள்வி, வள அருமை
   (2) உற்பத்தி, நுகர்வு, மூலதன உருவாக்கம், வர்த்தகம்
   (3) உற்பத்தி, காரணி வருமானம், நுகர்வு, மூலதன உருவாக்கம்
   (4) நுகர்வு, சேமிப்பு, மூலதன உருவாக்கம், ஏற்றுமதி வர்த்தகம்
   (5) காரணி வருமானம், நுகர்வு, மூலதன உருவாக்கம், உற்பத்தி விளைத்திறன்

02) பின்வருவனவற்றுள் எதனை பொருளாதாரப் பண்டத்தின் பண்பாக **கருத முடியாதது**.
   (1) உற்பத்தி செயன்முறையூடாக பெறப்படுபவை
   (2) உற்பத்தி, நுகர்வில் வெளிவாரி விளைவுகளைக் கொண்டவை.
   (3) உற்பத்தியில் அமையச் செலவினைக் கொண்டது.
   (4) நுகர்வின் போது எப்போதும் போட்டித்தன்மையைக் கொண்டிருக்கும்.
   (5) நிரம்பல் வரையறுக்கப்பட்டிருப்பதோடு நேரான பயனை நுகர்வில் தருபவை.

03) ஒரு நாட்டின் மனித மூலதனம் (Human Capital) அதிகரிக்கும்போது அங்கு எத்தகைய மாற்றம் ஏற்படும்?
   (1) வளத்திரட்சி நிலையாகவிருப்பதுடன் சாத்தியவள வெளியீடு குறையும்.
   (2) உற்பத்தி வினைத்திறன் அதிகரித்து சகல மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும்.
   (3) வள ஒதுக்கீட்டில் வினைத்திறனை ஏற்படுத்துவதுடன் வேலையின்மையையும் குறைக்கும்.
   (4) வளத்திரட்சியிலும் உற்பத்தித் திறனிலும் அதிகரிப்பை ஏற்படுத்தி உற்பத்தி மட்டத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்.
   (5) வேலையின்மையிலும் வறுமையிலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும்.


(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) பின்வருவனவற்றுள் எதனை சந்தைப் பொருளாதாரத்தின் பண்பாகக் கருதமுடியும்.
(1) சந்தையில் போட்டித்தன்மை மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படும்.
(2) பூரணமான நுகர்வோர் இறைமை காணப்படும்.
(3) தொழில் போட்டியும் தொழில் சுதந்திரமும் காணப்படும்.
(4) அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக்கள் காணப்படும்.
(5) தனியார் சொத்துரிமை அதிகளவிலும் மட்டுப்படுத்தப்பட்டளவில் அரச சொத்துரிமையும் காணப்படும்.

05) உணவு, ஆடை என்றும் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு நாட்டில் நீடித்த வரட்சி காரணமாக நீண்டகாலப் பகுதிக்கு மின்சாரத்தடை ஏற்படல் உற்பத்திச் சாத்திய வளையியில் எவ்வாறு பிரதிபலிக்கப்படும்.
(1) உற்பத்தி சாத்திய வளையி உணவு உற்பத்திக்குரிய அச்சினால் உள் நோக்கி நகரும்.
(2) ஆடை உற்பத்தி மாற்றமடையாமலிருக்க உணவு உற்பத்தியில் பின்னடைவை ஏற்படுத்தும்.
(3) உணவு, ஆடை ஆகிய இரண்டு அச்சுக்களாலும் உற்பத்திசாத்திய வளையி உள்நோக்கி நகரும்.
(4) ஆடை உற்பத்தி அச்சினால் உற்பத்தி சாத்திய வளையி வெளி நோக்கி நகர உணவு உற்பத்தி அச்சினால் உள் நோக்கி நகரும்.
(5) உற்பத்தி சாத்திய வளையி நகராமலிருக்க உணவு உற்பத்திக்குரிய வள ஒதுக்கீடு குறைவடையும்.

06) இழிவுப் பண்டமொன்றின் கேள்விக்கோட்டில் இடப்புற நுகர்வுக்கு காரணமாக அமைவது.
(1) பதிலீட்டுப் பொருளின் விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு .
(2) நிரப்புப்பண்டத்தின் விலையில் ஏற்படுகின்ற வீழ்ச்சி.
(3) அப்பண்டத்தின் விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு.
(4) நுகர்வோனின் பணவருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பு.
(5) நுகர்வோனின் மெய்வருமானத்தில் ஏற்படுகின்ற வீழ்ச்சி.

07) அருகிலுள்ள வரைபடம் X பண்டத்தின் நிரம்பல் வளையி $S_1$ இலிருந்து $S_2$ ஆக அசையும்போது நிரம்பல் சார்பில் ஏற்பட்ட சரியான மாற்றம்
(1) $QS_1 = 50 + 5p$ இலிருந்து $QS_2 = -100 + 10p$ ஆக மாறும்
(2) $QS_1 = 100 + 5p$ இலிருந்து $QS_2 = 100 + 10p$ ஆக மாறும்
(3) $QS_1 = -50 + 2.5p$ இலிருந்து $QS_2 = -100 + 2.5p$ ஆக மாறும்
(4) $QS_1 = -50 + 2.5p$ இலிருந்து $QS_2 = -100 + 5p$ ஆக மாறும்
(5) $QS_1 = 50 + 2.5p$ இலிருந்து $QS_2 = -100 + 10p$ ஆக மாறும்





08) கோதுமை மாவின் விலை கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 100 இலிருந்து ரூபா 200 ஆக அதிகரித்தபோது வாரமொன்றிற்கான கேள்வித்தொகை 10 கிலோகிராமிலிருந்து 6 கிலோகிராமாக வீழ்ச்சியடைந்தது. கோதுமை மாவின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் பெறுமதி.
(1) -0.75 (2) 0.4 (3) -4.0 (4) 4. -0.4 (5) -1.33

09) X என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு Qs = -200 + 20p எனத் தரப்படும்போது இப்பண்டத்திற்கு எவ்விலை நிலவும்போது விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி முடிவிலியாக (PES=∞) காணப்படும்.
(1) ரூபா 10 (2) ரூபா 5 (3) ரூபா 2 (4) ரூபா 20 (5) ரூபா 40

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10) பின்வரும் வரைபடம் அரிசிக்கான போட்டிச் சந்தைக்குரியது.
அச்சந்தையில் அரிசிக்கான கேள்வி $D_1$ இலிருந்து $D_2$ ஆக அதிகரிக்க நிரம்பல் $S_1$ இலிருந்து $S_2$ ஆக குறைவடைவதாகக் கருதவும். இம் மாற்றத்தின் பின் ஆரம்பச்சந்தை விலையில் காணப்படும் மிகைக்கேள்வியளவு யாது?




(1) 100 அலகுகள்
(2) 200 அலகுகள்
(3) 150 அலகுகள்
(4) 350 அலகுகள்
(5) 250 அலகுகள்

11) X பொருளுக்கான சந்தை தற்போது சமனிலையில் உள்ளதாகக் கருதுக. பின்வரும் நிகழ்வுகளில் X பொருளின் சமநிலை விலை மற்றும் சமனிலைத் தொகை ஆகிய இரண்டும் வீழ்ச்சியடையக் காரணமல்லாதது எது?
(1) X பொருளின் நிரப்புப் பொருளாகிய லு பொருளின் விலை அதிகரித்தல்.
(2) X பொருளின் பதிலீட்டுப் பொருளாகிய லு பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
(3) X பொருள் சாதாரண பொருளாக இருப்பதுடன் நுகர்வோனின் வருமானம் வீழ்ச்சியடைதல்.
(4) X பொருள் இழிவுப் பொருளாக இருப்பதுடன் நுகர்வோனின் வருமானம் அதிகரித்தல்.
(5) X பொருளின் சந்தையில் கொள்வனவாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.

12) எரிபொருளின் விலையேற்றத்தினால் மோட்டார் வாகனத்திற்கான கேள்வி 20% வீதத்தால் வீழ்ச்சியடைந்த போது இறக்குமதி தடை காரணமாக அவற்றின் நிரம்பல் 50% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இம் மாற்றத்தினால் மோட்டார் வாகனச் சந்தையில் விலை, தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினை சரியாக வெளிப்படுத்துவது.

| | **விலை** | **தொகை** |
|---|---|---|
| (1) | குறையும் | குறையும் |
| (2) | மாற்றமடையாது | குறையும் |
| (3) | அதிகரிக்கும் | குறையும் |
| (4) | நிச்சயமற்றது | அதிகரிக்கும் |
| (5) | அதிகரிக்கும் | நிச்சயமற்றது |

13) X என்ற பண்டத்திற்குரிய கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் தலா 50% த்தால் அதிகரிப்பதாகக் கருதவும். இம்மாற்றத்தினால் அப்பண்டத்தின் சமநிலை விலை, சமநிலைத் தொகை மற்றும் பொருளாதார மிகை என்பவற்றில் ஏற்பட்ட மாற்றத்தினை சரியாக வெளிப்படுத்தும் விடை எது?

| | சமநிலை விலை | சமநிலைத் தொகை | பொருளாதார மிகை |
|---|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| (3) | மாற்றமடையாது | அதிகரிக்கும் | மாற்றமடையாது |
| (4) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (5) | மாற்றமடையாது | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

14) பின்வரும் தரவுகள் குறிப்பிட்டவொரு காலப்பகுதியில் X பண்டத்தின் சந்தைக்கேள்வி, நிரம்பல் என்பவற்றைக் காட்டுகின்றன.

| விலை | கேள்வித் தொகை | வழங்கல் தொகை |
|---|---|---|
| 80 | 70 | 120 |
| 60 | 80 | 100 |
| 40 | 90 | 80 |
| 20 | 100 | 60 |
| 0 | 110 | 40 |

அரசாங்கம் இப்பொழுது X பண்டத்தின் உற்பத்தி அலகொன்றுக்கு ரூ. 20 வரியை விதிக்குமாயின் அரசுக்குக் கிடைத்த வரிவருமானம் எவ்வளவாகும்?

(1) ரூ. 2000 (2) ரூ. 1200 (3) ரூ. 1600 (4) ரூ. 800 (5) ரூ. 2400

15) X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

Qd = 600 - 10p

Qs = -200 + 10p

இப்பண்ட உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகுக்கு 20 ரூபாவை மானியமாக வழங்குவதாகக் கருதுக. மானியத்தின் பின் உற்பத்தியாளன் மிகை எவ்வளவாகக் காணப்படும்.?

(1) 7500 ரூபா (2) 6000 ரூபா (3) 10000 ரூபா (4) 4500 ரூபா (5) 45000 ரூபா

16) X பண்டத்தின் சந்தைச் சமநிலையை விட குறைந்த ஒரு உச்சவிலையை நிர்ணயிக்கும் போது சந்தையில் ஏன் மிகைக்கேள்வி ஏற்படுகின்றது.

(1) X பண்டத்தின் கேள்வி அதிகரிப்பும் நிரம்பல் வீழ்ச்சியும்

(2) X பண்டத்தின் கேள்வித்தொகை குறைப்பும் நிரம்பல் தொகை அதிகரிப்பும்

(3) X பண்டத்தின் கேள்வித்தொகை மட்டும் அதிகரித்தல்

(4) X பண்டத்தின் கேள்வித்தொகை, நிரம்பல்தொகை இரண்டும் அதிகரித்தல்

(5) X பண்டத்தின் கேள்வித்தொகை அதிகரிக்கும் அதேவேளை நிரம்பல்தொகை வீழ்ச்சியடைதல்

17) X என்ற விவசாயப் பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

Qd = 600 - 10P Qs = -50 + 10P

இப்பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் அரசு 50 ரூபாவை உத்தரவாத விலைத்திட்டமாக செயற்படுத்தி மிகை நிரம்பலை கொள்வனவு செய்யும்போது அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவும் தேறிய சமூக நலன் இழப்பும் எவ்வளவாகக் காணப்படும்?

| | அரச செலவு | தேறிய சமூக நலன் இழப்பு |
|---|---|---|
| (1) | ரூபா 17,500 | ரூபா 3062.50 |
| (2) | ரூபா 17,500 | ரூபா 14437.50 |
| (3) | ரூபா 35,000 | ரூபா 3062.50 |
| (4) | ரூபா 17,500 | ரூபா 3500.00 |
| (5) | ரூபா 15,750 | ரூபா 14437.50 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18) சிறு தானியங்களுக்குரிய போட்டிச் சந்தையில் அதன் நிரம்பல் வரட்சி காரணமாக வீழ்ச்சியடைகின்ற போதிலும் அச் செய்கையாளர்களின் வருமானம் அதிகரித்துக் காணப்படும். இதற்குரிய காரணம்

(1) சிறுதானியங்கள் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைவிட சிறியதாகவிருத்தல்.
(2) சிறுதானியங்கள் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைவிட பெரியதாகவிருத்தல்.
(3) சிறுதானியங்கள் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றைவிட பெரியதாகவிருத்தல்.
(4) சிறுதானியங்கள் ஒருமைக்கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டிருத்தல்.
(5) அரசாங்கம் சிறுதானிய செய்கையாளர்களுக்கு பசளைகளை மானிய விலையில் வழங்கல்.

19) குறுங்கால உற்பத்தி நிறுவனத்தின் மொத்த உற்பத்தியை பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றது.

| மாறும் காரணி (L) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த உற்பத்தி (T.P) | 5 | 12 | 22 | 35 | 45 | 50 | 50 | 42 |

இந்நிறுவனம் எத்தனையாவது மாறும் உள்ளீட்டினை பயன்படுத்தும்போது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்பட ஆரம்பிக்கும்?

(1) 3 (2) 6 (3) 7 (4) 5 (5) 4

20) குறுங்காலத்தில் A என்ற உற்பத்தி நிறுவனம் ஆடை உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கருதவும். அந்நிறுவனம் 100 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திய போது ஊழியத்தின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் 50 ஆடைகளாகக் காணப்பட்டது. அவ் வெளியீட்டில் பின்வருவனவற்றுள் எது உண்மையாகக் காணப்படும்?

(1) இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி உச்ச நிலையில் காணப்படும்
(2) இந்நிறுவனத்தின் எல்லை உறபத்தி உச்ச நிலையில் காணப்படும்
(3) இந்நிறுவனத்தின் சராசரி உற்பத்தி வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும்.
(4) இந்நிறுவனத்தின் சராசரி மாறும் செலவும் எல்லைச் செலவும் சமமாகக் காணப்படும்
(5) இந்நிறுவனத்தின் சராசரி மாறும் செலவினை விட எல்லைச் செலவு உயர்வாகக் காணப்படும்.

21) குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்றில் பல்வேறு வெளியீட்டு மட்டங்களின் மொத்த செலவுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வெளியீட்டு மட்டம் | மொத்த செலவு (ரூ) |
|---|---|
| 0 | 100 |
| 1 | 120 |
| 2 | 130 |
| 3 | 138 |

| வெளியீட்டு மட்டம் | மொத்த செலவு (ரூ) |
|---|---|
| 4 | 160 |
| 5 | 190 |
| 6 | 238 |
| 7 | 296 |

இத்தகவல்களின் படி 6 அலகுகள் உற்பத்தி செய்யும்போது சராசரி மாறுஞ்செலவின் அளவு யாது?

(1) 23 ரூபா (2) 28 ரூபா (3) 35 ரூபா (4) 36 ரூபா (5) 48 ரூபா

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) தனியுரிமைப் போட்டிச் சந்தையானது,
(1) ஒரு தனி நிறுவனத்தைக் கொண்டுள்ள சந்தை அமைப்பாகும்.
(2) சிறு எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டுள்ள சந்தை அமைப்பாகும்.
(3) ஓரினத்தன்மை கொண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும் சந்தை அமைப்பாகும்.
(4) வேறாக்கம் செய்யப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யும் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும் சந்தை அமைப்பாகும்.
(5) விளம்பரம் காணப்படாத சந்தை அமைப்பாகும்.

23) குறுங்காலத்தில் ஒரு நிறைபோட்டி நிறுவனம் 800 அலகுகள் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டை உற்பத்தி செய்யும் போது சந்தைவிலை 150 ரூபாவாகவும் அலகொன்றின் உற்பத்திச்செலவு 180 ரூபாவாகவும் மொத்த நிலையான செலவு 16000 ரூபாவாகவும் காணப்பட்டது. ஏனையவை மாறாத நிலையில் இந்நிறுவனத்தின் குறுங்கால நடத்தையாக எது அமையும்.
(1) நிறுவனம் நட்டமடைவதனால் விலையை அதிகரிக்க வேண்டும்.
(2) நிறுவனத்தின் மொத்த வருமானம் மொத்த மாறும் செலவினை விட குறைவாகயிருப்பதனால் உற்பத்தியை நிறுத்தி சந்தையை விட்டு வெளியேறும்.
(3) நிறுவனத்தின் நட்டமும் மொத்த நிலையான செலவும் சமமாகயிருப்பதனால் தொடர்ந்தும் அதேயளவு தொகையை வழங்க முடியும்.
(4) நிறுவனம் பூச்சிய சிக்கன இலாபத்தினை கொண்டிருப்பதனால் தன் வெளியீட்டினை அதிகரிக்க முடியும்.
(5) நிறுவனம் தன் மொத்த நிலையான செலவினைக் குறைத்து தன் வெளியீட்டினை அதிகரிக்க முடியும்.

24) அரசாங்கத் துறையும் சர்வதேச வர்த்தகமும் அற்ற ஒரு பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்ட மாதிரியில் வீட்டுத்துறையானது,
(1) முடிவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வோரிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
(2) பொருள் சந்தையில் வளங்களின் விற்பனையின் மூலம் வருமானத்தைப் பெறும்.
(3) வணிக நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துவதற்காக அந்நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யும்.
(4) தமது உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளரிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
(5) சேமிப்புக்களைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளர்களுக்கு வருமானங்களைக் கொடுப்பனவு செய்யும்.

25) பொருளாதாரமொன்று மந்த நிலையிலிருந்து மெதுவாக எழுச்சியடையும் போது அப் பொருளாதாரத்தின்
(1) நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளி அதிகரித்துச் செல்லும்.
(2) உண்மை வெளியீடானது சாத்திய வெளியீட்டினை விட பெரியதாகக் காணப்படும்.
(3) கைத்தொழில்களில் காணப்படும் மிகை உற்பத்தி இயன்றளவு குறைவடையும்.
(4) மொத்தக் கேள்வியில் வீழ்ச்சி ஏற்பட்டு பொதுவிலைமட்டம் வீழ்ச்சியடையும்.
(5) முதலீட்டாளர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடையும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

26) ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

- தனியார் நுகர்வு 8000
- பொது நுகர்வு 7000
- மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் 4000
- இருப்பு மாற்றம் 200
- பொருட்களின் தேறிய ஏற்றுமதி -2200
- பொருட்களின் இறக்குமதி 6700
- தேறிய நேரில் வரி 600

இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு சேமிப்பு எவ்வளவாகயிருக்கும்?

(1) 1600 பி.ரூபா (2) 2200 பி.ரூபா (3) 1800 பி.ரூபா
(4) 1000 பி.ரூபா (5) 2000 பி.ரூபா

27) ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனதாக்கத்தின் கீழ் எது **உள்ளடங்குவதில்லை**?

(1) தகவல் தொழிநுட்பக்கருவிகளை கொள்வனவு செய்தல்.
(2) ஒரு நிறுவனம் மற்றுமொரு வணிக நிறுவனத்திலிருந்து பண்டக்குறியை ஒருதொகைப் பணத்தினை செலுத்தி கொள்வனவு செய்தல்
(3) பல மில்லியன் ரூபா செலவில் புதிய விமான நிலையத்தினை உருவாக்குதல்
(4) ஒரு குடும்பம் தம் போக்குவரத்து தேவைக்காக 10 மில்லியன் ரூபாவில் புதிய மோட்டார் காரினை கொள்வனவு செய்தல்
(5) ஆடைத் தொழிற்சாலையொன்று பல மில்லியன் ரூபா செலவில் புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்தல்

28) எளிய பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு 200 மில்லியன் ரூபாவாகவும் எல்லை நுகர்வு நாட்டம் (mpc) 0.9 ஆகவும் தன்னிச்சையான செலவு மாறியின் பெறுமதி 300 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டுப் பெறுமதி (Y) எவ்வளவு?

(1) 2000 மில்லியன் ரூபா (2) 1000 மில்லியன் ரூபா (3) 3000 மில்லியன் ரூபா
(4) 30,000 மில்லியன் ரூபா (5) 5000 மில்லியன் ரூபா

29) பின்வரும் அட்டவணை கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் சிலவற்றைக் காட்டுகிறது. (எல்லா பெறுமானங்களும் பில்லியன் ரூபாவிலாகும்.)

| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | இறக்குமதிகள் (M) | வரிகள் (T) | முதலீடு (I) | ஏற்றுமதிகள் (X) | சேமிப்புகள் (S) |
|---|---|---|---|---|---|
| 30 | 70 | 40 | 50 | 80 | 60 |

பின்வருவனவற்றுள் இப்பொருளாதாரம் பற்றிய சரியான கூற்று எது?

(1) ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
(2) சேமிப்புகள் வரிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
(3) உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
(4) வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
(5) உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களுக்குச் சமமாவதால் பொருளாதாரம் சமநிலையில் இருக்கும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

30) வெளிநாட்டுத்துறையற்ற அரசதுறையைக் கொண்ட பொருளாதாரமொன்றில் எல்லை சேமிப்பு நாட்டப் பெறுமதி (mps) 0.25 ஆகக் காணப்பட்டது. அப்பொருளாதாரத்தின் அரசசெலவுபெருக்கி, வரிப்பெருக்கி, சமநிலை வரவு செலவுத்திட்டம் பெருக்கி என்பவற்றை சரியாகக் காட்டுவது.

| | அரசசெலவுப்பெருக்கி | வரிப்பெருக்கி | சமநிலை வரவு செலவுத் திட்டப் பெருக்கி |
|---|---|---|---|
| 1. | 5.0 | -4.0 | 1.0 |
| 2. | 4.5 | -3.5 | 1.0 |
| 3. | 4.0 | -3.0 | 1.5 |
| 4. | 3.0 | -4.0 | 2.0 |
| 5. | 4.0 | -3.0 | 1.0 |

31) அரசாங்க தலையீட்டினைக் கொண்ட வெளிநாட்டு வர்த்தகமற்ற பொருளாதாரமொன்றின் தரவுகள் வருமாறு.

நுகர்வு (C) = 200 + 0.8yd.

முதலீடு (I) = 300 மில்லியன் ரூபா

அரசாங்க கொள்வனவுகள் (G) = 100 மில்லியன் ரூபா

வரி ஸ்ரீ 25மூ எல்லா வருமானத்திலும் (வுஸ்ரீ0.25ல)

இப்பொருளாதாரத்தின் சம நிலைத் தேசிய வருமானம் எவ்வளவு?

(1) 3000 மில்லியன் ரூபா (2) 1500 மில்லியன் ரூபா (3) 4500 மில்லியன் ரூபா

(4) 1000 மில்லியன் ரூபா (5) 1250 மில்லியன் ரூபா

32) மூடிய பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு C=400+0.75yd என தரப்பட்டுள்ளது. அரசாங்கம் வீட்டுத்துறையின் வருமானத்திற்கு 20% மான வரியை விதிக்கும்போது பின்வருவனவற்றுள் எது உண்மையாகவிருக்கும்.

(1) தன்னிச்சையான நுகர்வுமட்டம் வீழ்ச்சியடையும்.

(2) தன்னிச்சையான நுகர்வுமட்டம் அதிகரிக்கும்.

(3) ஆரம்ப நுகர்வுக் கோட்டிற்கு சமாந்தரமாக புதிய நுகர்வு வளையி இடப்புறம் நகரும்.

(4) ஆரம்ப நுகர்வுக் கோட்டிற்கு சமாந்தரமாக புதிய நுகர்வு வளையி வலப்புறம் நகரும்.

(5) தன்னிச்சையான நுகர்வு மாறாதிருக்க புதிய நுகர்வு வளையி இடப்புறமாக சுழற்சியடையும்.

33) பின்வருவனவற்றுள் எது இலங்கையின் பண நிரம்பல் கட்டமைப்பில் விரிந்த பண நிரம்பலுக்குள் (M2b) உள்ளடங்குவதில்லை.

(1) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம்.

(2) வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள்.

(3) சீரமைக்கப்பட்ட வெளி நாட்டு நாணய வைப்புக்கள்.

(4) வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்.

(5) வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34) இலங்கையின் நாணயக் கூட்டுக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| **விடயம்** | **பெறுமதி (பில்லியன் ரூபாவில்)** |
|---|---|
| பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம் | 750 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புக்கள | 675 |
| சீராக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | 1000 |
| வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம் | 220 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள் | 8100 |

மேலுள்ள தகவல்களின் படி வெளிநிற்கும் நாணயத்தின் பெறுமதியையும் சீரமைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) சரியாகக் காட்டும் விடை எது?

(1) 970 பில்லியன் ரூபா, 9525 பில்லியன் ரூபா
(2) 970 பில்லியன் ரூபா, 1425 பில்லியன் ரூபா
(3) 970 பில்லியன் ரூபா, 10525 பில்லியன் ரூபா
(4) 950 பில்லியன் ரூபா, 10125 பில்லியன் ரூபா
(5) 1425 பில்லியன் ரூபா, 10525 பில்லியன் ரூபா

35) செலவுத்தூண்டல் பணவீக்கம் நேரடியாக ஏற்படுவது
(1) வரிக் குறைப்பினாலாகும்.
(2) மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரிப்பதனாலாகும்.
(3) அரசாங்கக் கொள்வனவுகள் அதிகரிப்பதனாலாகும்.
(4) இறக்குமதிப் பருமன் அதிகரிப்பதனாலாகும்.
(5) சம்பளங்கள் உயர்வதனாலாகும்.

36) மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினைக் குறைக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும்?
(1) பணக் கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(2) பணக் கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
(3) பண நிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(4) பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(5) பணக் கேள்வி, பண நிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரித்தல்.

37) அரசாங்கம் ஏககாலத்தில் விரிவாக்கப் பணக்கொள்கையையும் விரிவாக்க அரச இறைக் கொள்கையையும் கையாளுமாயின், வட்டிவீதம், வேலையின்மை என்பவற்றில் எவ்வாறான தாக்கம் ஏற்படும்?

| | வட்டி வீதம் | வேலையின்மை |
|---|---|---|
| 1. | அதிகரிப்பு | நிர்ணயிக்க முடியாது |
| 2. | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 3. | வீழ்ச்சி | நிர்ணயிக்க முடியாது |
| 4. | நிர்ணயிக்க முடியாது | வீழ்ச்சி |
| 5. | நிர்ணயிக்க முடியாது | அதிகரிப்பு |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

38) வணிக வங்கியொன்று பணத்தை உருவாக்குவது
   (1) தனது பிணையங்களை (securities) விற்பனை செய்வதன் மூலமாகும்.
   (2) தனது ஒதுக்குகளை அதிகரிப்பதன் மூலமாகவும்.
   (3) தன்னிடமுள்ள மிகை ஒதுக்குகளைக் கடன் வழங்குவதன் மூலமாகும்.
   (4) அதிகளவில் காசோலைகளை அச்சிடுவதன் மூலமாகும்.
   (5) தன்னிடமுள்ள ஒதுக்குகளை ஆவணங்களாக மாற்றுவதன் மூலமாகும்.

39) வணிக வங்கியொன்றில் கேள்வி வைப்புக்கள் 50000 ரூபாவாகவும் ஒதுக்குகள் 8000 ரூபாவாகவும் கடன்கள் 42000 ரூபாவாகவும் காணப்பட்டது. நியதி ஒதுக்கு தேவை 0.1 எனக்கருதுக. இவ்வங்கியில் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக்கணக்கில் 10000 ரூபாவை புதிதாக வைப்பிலிடும் போது சட்டரீதியான ஒதுக்கு, மிகைஒதுக்கு எவ்வளவால் அதிகரிக்கும்.

| | சட்டரீதியான ஒதுக்கு | மிகை ஒதுக்கு |
|---|---|---|
| 1. | 10000 ரூபாவால் அதிகரிக்கும் | 10000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 2. | 10000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 3. | 6000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 4. | 5000 ரூபாவால் அதிகரிக்கும் | 10000 ரூபாவால் அதிகரிக்கும் |
| 5. | 1000 ரூபாவால் அதிகரிக்கும் | 9000 ரூபாவால் அதிகரிக்கும் |

40) சந்தைப் பொருளாதாரத்தில் வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதற்கு எது தடையாகயிருக்கும்
   (1) பொதுப்பொருள் உற்பத்திக்கு சாதனங்கள் அதிகளவில் ஒதுக்கீடு செய்யப்படல்
   (2) பொதுவளங்களின் குறைப்பயன்பாடு
   (3) வருமானப் பங்கீட்டில் சமத்துவம் காணப்படுதல்
   (4) தகவல்களின் ஒத்தமைவின்மை
   (5) உற்பத்திகளில் தோன்றும் வெளிவாரிகளை கருத்தில் எடுத்து உற்பத்தி நடைபெறுதல்

41) ஒரு “மேன்மைப் பொருள்” என்பது
   (1) ஒவ்வொருவரினதும் தகமையின் அடிப்படையில் நுகர்வோருக்கு வழங்கப்படும் பொருளாகும்.
   (2) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் மிகச் சிறியளவே கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
   (3) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் தேவைப்படும் அளவைவிட மிக அதிகமான அளவில் கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
   (4) பொருளை நுகர்வதனால் ஒரு நுகர்வோன் பெறும் நன்மையினை எல்லா நுகர்வோருக்கும் விரிவாக்கம் செய்யப்படத்தக்க பொருளாகும்.
   (5) பொருளை நுகர்வதனால் பெறப்படும் தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள பொருளாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

42) 2022ம் ஆண்டுத் தரவுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் வரிவருமானத்தின் பிரதான மூலாதாரங்களாக அமைவன.

(1) உற்பத்திவரிகள், வருமான வரி மற்றும் பெறுமதிசேர்வரி, இறக்குமதி தீர்வை

(2) பெறுமதிசேர்வரி, புரள்வுவரி மற்றும் பொருளாதாரச் சேவைக் கட்டணங்கள், செஸ்வரி

(3) வருமானவரி, பெறுமதிசேர்வரி, கலால் தீர்வை, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வை.

(4) பெறுமதிசேர்வரி, உற்பத்தி வரிகள், வருமானவரி, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வை

(5) உற்பத்திவரி, வருமானவரி, பெறுமதிசேர்வரி மற்றும் துறைமுக விமானநிலைய அபிவிருத்தி தீர்வை.

43) 2021ம் ஆண்டு அரச பாதீட்டின் நடைமுறைக் கணக்கு மீதியும் மொத்த மீதியும் மற்றும் ஆரம்பக் கணக்கு மீதியும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை வீதமாகக் காணப்பட்டது.

| | **நடைமுறைக் கணக்கு மீதி** | **மொத்த மீதி** | **ஆரம்பக் கணக்கு மீதி** |
|---|---|---|---|
| 1. | -3.6 | -9.6 | -3.6 |
| 2. | -7.3 | -11.7 | -5.7 |
| 3. | -7.7 | -12.2 | -6.0 |
| 4. | -7.7 | -11.1 | -6.0 |
| 5. | -4.6 | -9.6 | -3.6 |

44) பின்வரும் சமன்பாடுகளில் எது **உண்மையற்றது**?

(1) அரச பாதீட்டு மொத்த மீதி = அரச பெறுகை – அரசின் மொத்தக் கொடுப்பனவு

(2) அரச பாதீட்டு மொத்த மீதி = அரச வருமானம் – அரசின் செலவுகள்

(3) அரச பாதீட்டின் நடைமுறைக்கணக்கு மீதி = அரச வருமானம் – அரசின் நடப்புச் செலவு

(4) அரச பாதீட்டின் நடைமுறைக்கணக்கு மிகை = அரச வருமானம் , அரசின் நடப்புச் செலவு

(5) அரச பாதீட்டின் முதன்மைக்கணக்கு மீதி = அரச பெறுகை – வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலான அரசின் மொத்தச் செலவு.

45) 2022ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பாதீட்டுப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு பயன்படுத்திய முதன்மையான சாதனம் எது?

(1) திறைசேரி முறிகள்
(2) திறைசேரி உண்டியல்கள்.
(3) இலங்கை அபிவிருத்தி முறிகள்.
(4) மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள்.
(5) வர்த்தக உண்டியல்கள்.

46) பின்வரும் அட்டவணை X, Y ஆகிய நாடுகள் அரிசி, கோப்பி ஆகியவற்றின் உற்பத்தியில் தம்மிடமுள்ள எல்லா வளங்களையும் பயன்படுத்தும் போது அவற்றில் ஒவ்வொன்றையும் உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலைக் காட்டுகிறது.

| நாடு | அரிசி வெளியீட்டின் உச்ச அளவு (அலகுகள்) | கோப்பி வெளியீட்டின் உச்ச அளவு (அலகுகள்) |
|---|---|---|
| X | 5000 | 5000 |
| Y | 10000 | 5000 |

இரு நாடுகள் தொடர்பிலும் செலவு நன்மையினைக் குறிக்கும் சரியான கூற்று யாது?

(1) X நாடு அரிசி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

(2) X நாடு கோப்பி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

(3) X நாடு அரிசி உற்பத்தியில் முழு நன்மையைக் கொண்டுள்ளது.

(4) Y நாடு கோப்பி உற்பத்தியில் முழு நன்மையைக் கொண்டுள்ளது.

(5) Y நாடு கோப்பி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

47) பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் மூன்றாண்டு காலப் பகுதியிலான பொருளாதாரச் செயற்பாட்டினைக் காட்டுகின்றது.

| ஆண்டு | ஏற்றுமதிகளின் அளவுச்சுட்டி | இறக்குமதிகளின் அளவுச்சுட்டி | நாணயமாற்று வீதம் |
|---|---|---|---|
| 1 | 100 | 100 | 200 |
| 2 | 90 | 100 | 200 |
| 3 | 80 | 100 | 200 |

பின்வருவனவற்றுள் எது மேற்போந்த விபரங்களுடன் இசைவானது?
(1) ஏற்றுமதிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
(2) இறக்குமதிகளின் விலை அதிகரித்துள்ளது.
(3) வர்த்தகமாற்று விகிதத்தில் ஓர் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.
(4) வர்த்தகநிலுவை மோசமடைந்து சென்றுள்ளது.
(5) வர்த்தக மாற்று விகிதத்தில் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

48) மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் இலங்கையிலுள்ள தனது பெற்றோருக்கு 500 டொலர்களை அனுப்புகின்றார். இக் கொடுக்கல் வாங்கல் இரட்டைப்பதிவு கோட்பாட்டின் படி இலங்கையின் சென்மதி நிலுவையில் எவ்வாறு பதிவு செய்யப்படும்.

| | செலுத்தல்கள் | பெறுகைகள் |
|---|---|---|
| (1) | நிதிக்கணக்கு | முதனிலை வருமானக்கணக்கு |
| (2) | மூலதனக் கணக்கு | நிதிக்கணக்கு |
| (3) | நிதிக்கணக்கு | இரண்டாம்நிலை வருமானக்கணக்கு |
| (4) | இரண்டாம்நிலை வருமானக்கணக்கு | நிதிக்கணக்கு |
| (5) | நடைமுறைக்கணக்கு | மூலதனக்கணக்கு |

49) பொருளாதார வளர்ச்சியானது பொதுவாகக் அளவிடப்படுவது.
(1) நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
(2) மெய் மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
(3) முதலீட்டு வீதத்தில் ஏற்படும் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
(4) நுகர்வோர் செலவீட்டில் ஏற்படும் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
(5) ஆக்கக் கைத்தொழில் வெளியீட்டின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.

50) பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக ஏற்கக் கூடிய கூற்று எது?
(1) தலைக்குரிய வருமான அதிகரிப்போடு தொழிலின்மை வீதம் அதிகரித்தும் வருமான சமமின்மை சார்பளவில் அதிகரித்தல்
(2) பொருளாதார வளர்ச்சியினால் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமடைவதோடு சமூக கலாசார விடயங்களில் ஏற்படுகின்ற முன்னேற்றம்
(3) சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றமடைவதுடன் இயற்கை வளப்பாவனையைத் தூண்டி எதிர்கால மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுதல்
(4) சமூகத்தின் சகல அம்சங்களிலும் அளவும் தரமும் அதிகரித்து செல்லும்
(5) தலைக்குரிய மெய்வருமானம் வீழ்ச்சியடைவதுடன் சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 5th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் - II | Three Hours | 21 | T | II |
| Economics - II | Gr : 13 (2023) | | | |

### பகுதி II

அறிவுறுத்தல் : உப பிரிவு **"அ"**, **"ஆ"** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### உப பிரிவு - 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

*01)* (i) உற்பத்திக்குப் பயன்படும் வகையில் இயற்கையின் அன்பளிப்பாக கிடைக்கின்ற அனைத்தும் "நிலம்" என்கின்ற உற்பத்திக் காரணியாக கருதப்படும். இக்கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(ii) "ஒரு நாட்டின் ஊழியற்படையில் 20% மானவர்கள் தொழிலற்ற நிலையில் காணப்படுகின்றனர் எனக் கருதவும். அந் நாட்டில் ஊழிய வளம் அருமையற்ற தாகவுள்ளது என்ற முடிவுக்கு உம்மால் வரமுடியுமா? விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) "தாராள சந்தைப் பொருளாதாரத்தினையே சமூக சந்தைப் பொருளாதாரம் என்கின்றோம்" இதனை ஏற்பீரா? விளக்குக? **(04 புள்ளிகள்)**

(iv) பின்வரும் நிகழ்வுகள் அல்லது சம்பவங்களை உற்பத்தி சாத்திய வளையி மூலம் விளக்குக.

அ) பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான தொழிலாளர்கள் நாட்டினை விட்டு வெளியேறுதல்

ஆ) பொருளாதார நெருக்கடி காரணமாக ஆடம்பரப் பண்டங்களுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி

இ) நீடித்த வரட்சி காரணமாக நீண்டகாலப்பகுதிக்கு மின்சாரத் தடை ஏற்படல்.

ஈ) வரட்சி காரணமாக மரக்கறி செய்கை பாதிக்கப்பட்டமை. **(08 புள்ளிகள்)**

*02)* (i) சாதாரண பண்டம், இழிவுப்பண்டம் ஆகிய இரண்டினையும் வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

(ii) ஏனையவை மாறாத நிலையில் கைத்தொழில் பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது அதன் நிரம்பல் தொகை அதிகரிப்பதற்குரிய இரண்டு காரணங்களை விளக்குக. **(06 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) X என்ற பண்டத்தின் விலை ரூபா 200 இலிருந்து ரூபா 250 ஆக அதிகரித்தபோது அப்பண்டத்தின் கோரல் தொகை 40 அலகிலிருந்து 30 அலகுகளாக வீழ்ச்சியடைந்தது எனக் கருதவும். X என்ற பண்டம் அலகுசார் P கேள்வியைக் கொண்டது (PEd=1) என்ற முடிவுக்கு வரமுடியுமா? விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) முட்டைக்கான போட்டிச் சந்தையில் முட்டை மீதான நுகர்வோர் விருப்பம் அதிகரிக்கும் அதே வேளை கோழித்தீன்களின் விலைகளும் இரண்டு மடங்காக அதிகரிக்கும்போது முட்டைச் சந்தையில் சம நிலை விலையிலும் தொகையிலும் ஏற்படும் தாக்கத்தினை பொருத்தமான வரைபடங்கள் மூலம் விளக்குக. **(05 புள்ளிகள்)**

*03)* (i) அரசாங்கம் போட்டிச் சந்தையில் தலையிடும்போது பரிமாற்றுத் தொகையில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் அங்கு தேறிய சமூக நலன் இழப்பும் (Net welfare loss) ஈடுசெய்ய முடியாத இழப்பும் (Dead weight loss) தோற்றம் பெறுகின்றது. அவ்விரண்டு விடயங்களையும் தெளிவுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

(ii) அரசாங்கம் சிகரெட் ஒன்றிற்கு 40 ரூபா ஐ உற்பத்தி வரியாக விதிக்கின்றபோது சிகரெட் சந்தையில் மொத்த மிகைக்கு என்ன நிகழும் என்பதனை பொருத்தமான வரைபின் மூலம் விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iii) மரக்கறிகளின் நிரம்பல் இயற்கைத் தாக்கத்தினால் வீழ்ச்சியடைந்த போதிலும் அச்செய்கையாளர்களின் வருமானம் முன்னரைவிட அதிகரித்து காணப்பட்டது. இத்தகைய நிலமை எவ்வாறு நிகழும் என்பதனை வரைபடத்தின் மூலம் விளக்குக? **(05 புள்ளிகள்)**

(iv) X எனும் பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 1000-4P$$

$$Qs = -50 +P$$

இப்பண்டத்தின் இழிவளவான விலையாக அரசு 230 ரூபாவை நிர்ணயித்து அங்கு உருவாகும் மிகை நிரம்பலை அரசு கொள்வனவு செய்வதாக கருதவும்.

அ) நுகர்வோன் மிகை **(1 புள்ளிகள்)**

ஆ) தேறிய சமூக நலன் இழப்பு **(2 புள்ளிகள்)**

இ) ஈடு செய்ய முடியாத இழப்பு **(2 புள்ளிகள்)**

என்பவற்றைக் கணிப்பிடுக?

*04)* (i) குறைந்து செல்லும் எல்லை விளைவு, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு ஆகிய இரண்டும் நிறுவனமொன்றின் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(ii) எல்லைச்செலவு, சராசரி மொத்தச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக? **(04 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) "அகிலன்" என்பவர் தகவல் தொழினுட்ப பட்டதாரியாவார். அவர் மிலான் என்ற தகவல் தொழினுட்ப கம்பனியில் தொழிலுக்கு இணைந்து மாதம் 120,000ரூபா வேதனமாக பெற்றுக்கொள்கின்றார். அகிலன் சொந்தமாக ஒரு தகவல் தொழினுட்ப நிறுவனத்தினை உருவாக்குவதற்கு உத்தேசித்துள்ளார். அந் நிறுவனத்திற்கு கட்டிடம் ஒன்றை 40000ரூபா வாடகையில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் 60000 மாதச் சம்பளத்தில் இரண்டு தகவல் தொழினுட்பவியலாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். இவ் வணிக முயற்சியினால் மாதாந்தம் 250,000 ரூபாவை வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தரவுகளின் அடிப்படையில் அகிலன் என்பவரால் உருவாக்கப்படும் தகவல் தொழினுட்ப நிறுவனத்தால் பொருளியல் இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியுமா? விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iv) பிரவேசதடை என்றால் என்ன? தனியுரிமையில் பிரவேசத்தடையை உருவாக்கும் காரணிகள் யாவை? **(04 புள்ளிகள்)**

(v) நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்காலத்தில் சாதாரண இலாபத்தினை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். இக்கூற்றினை ஏற்பீரா? உமது விடையினை பொருத்தமான வரைபடங்கள் மூலம் தெளிவுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

*05)* (i) பொருளாதார விரிவாக்கம், பொருளாதார வளர்ச்சி இரண்டினையும் வேறுபடுத்துக? **(04 புள்ளிகள்)**

(ii) வருமான அணுகுமுறையில் ஒருநாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) எவ்வாறு கணிப்பிட முடியும் என்பதனை கருதுகோள் எண்களைப் பயன்படுத்தி வெளிப்படுத்துக? **(04 புள்ளிகள்)**

(iii) ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 8000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 4000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -2200 |
| • பொருட்களின் இறக்குமதி | 6700 |
| • தேறிய நேரில் வரி | 600 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 400 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

அ) மொத்த உள்நாட்டு சேமிப்பு. **(2 புள்ளிகள்)**

ஆ) மூலவளம் பயன்பாடு. **(2 புள்ளிகள்)**

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

(iv) "தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமானது தேசிய வருமானத்தின் நிறைதொழில் மட்டத்திற்குச் சமமாக இருக்க வேண்டிய அவசியமில்லை" இக்கூற்றினை விளக்குக?

(04 புள்ளிகள்)

(v) வெளிநாட்டுத்துறையற்ற பொருளாதாரமொன்றின் பேரினப்பொருளியல் தகவல்கள் வருமாறு:

நுகர்வு (C) = 300 + 0.8 Yd வரி (T) = 40 முதலீடு (I) = 400

அரசமாற்றல் கொடுப்பனவு (TR) = 20 அரசாங்க கொள்வனவுகள் (G) = 200

(a) தன்னிச்சையான செலவு மாறியின் பெறுமதி. **(1 புள்ளிகள்)**

(b) பெருக்கியின் பெறுமதி **(1 புள்ளிகள்)**

(c) சமநிலை வெளியீட்டில் சேமிப்பின் பெறுமதி **(1 புள்ளிகள்)**

(d) மொத்த வெளிப்பாய்ச்சல் பெறுமதி **(1 புள்ளிகள்)**

## உப பிரிவு "ஆ"

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

*06)* (i) ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் (M2b) என்றால் என்ன? அதனை தீர்மானிக்கும் காரணிகள் யாவை? **(04 புள்ளிகள்)**

(ii) தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? இச்சுட்டெண் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை (CCPI) விட ஏன் சிறந்தது என்பதனையும் தெளிவுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

(iii) இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோள் எது? அக்குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு மத்திய வங்கியின் அண்மைக்காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) வங்கி முறைமையொன்றின் கருதுகோள் ரீதியான இருப்பு நிலைக்குறிப்பு கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பொறுப்புக்கள் (ரூபா பில்லியன்) | சொத்துக்கள் (ரூபா பில்லியன்) |
|---|---|
| கேள்வி வைப்புக்கள் | ஒதுக்குகள் 2500 |
| | கடன்கள் 7500 |
| 10,000 | 10,000 |

இவ்வங்கி முறைமையின் நியதி ஒதுக்கு தேவை 0.1 எனக் கருதுக. இப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் வசமுள்ள காசின் அளவு 15000 பில்லியன் ரூபாவாகும் எனக் கொள்க.

அ) இவ் வங்கிக் கட்டமைப்பின் நியதி ஒதுக்கு மட்டம், மிகை ஒதுக்கு மட்டம் எவ்வளவாகக் காணப்படும். **(02 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) பொதுமக்கள் தம் கைவசமுள்ள நாணயத்தில் 200 பில்லியன் ரூபாவை வங்கிக்கட்டமைப்பில் வைப்பிலிருவதாகக் கருதுக. பூரண கடனாக்கத்தின் பின் பண நிரம்பல் எவ்வளவாகக் காணப்படும்? **(02 புள்ளிகள்)**

இ) வணிக வங்கிகளின் கடனாக்க அளவை குறைக்கும் இரன்டு காரணிகளை குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

07) (i) “உற்பத்தி வெளிவாரி விளைவுகள்” ஏன் உத்தம வெளியீட்டினை சந்தைகள் அடைவதற்கு தடையாகவுள்ளது என்பதனை பொருத்தமான வரைபடங்கள் மூலம் விளக்குக. **(06 புள்ளிகள்)**

(ii) இலங்கை அரசாங்கத்தின் வரி வருமானத்தில் நேர்வரியின் பங்கினை 20% த்திலிருந்து 40% ஆக அதிகரிக்கும்படி சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைவிட்டுள்ளது. இதன் சாதக, பாதக விளைவுகளைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) வரியின் மிகைச்சுமை (Excess Burden of taxation) என்பதனால் கருதப்படுவதென்ன? வரியின் மிகைச்சுமை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றினையும் பொருத்தமான வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துக. **(04 புள்ளிகள்)**

(iv) அரசகடன் மறுசீரமைப்பு என்றால் என்ன? இலங்கை அரசின் கடன்களை ஏன் மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டும்? **(06 புள்ளிகள்)**

08) (i) பின்வரும் அட்டவணை X, Y எனும் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடு A, நாடு B ஆகியவற்றின் ஓரலகு உள்ளீட்டுக்குரிய வெளியீட்டு மட்டத்தை புலப்படுத்துகின்றது?

| பண்டம் / நாடுகள் | வெளியீட்டு மட்டம் (அலகுகளில்) | |
|---|---|---|
| | X பண்டம் | Y பண்டம் |
| நாடு A | 100 | 50 |
| நாடு B | 90 | 30 |

அ) ஒவ்வொரு நாட்டிலும் தலா 100 உள்ளீடுகளைக் கொண்டிருப்பதாகக் கருதி ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியாக நேர்கோட்டு உற்பத்தி சாத்திய வளையியை வரைக? **(02 புள்ளிகள்)**

ஆ) ஒவ்வொரு நாடும் எப்பண்ட உற்பத்தியில் சிறக்குமியல்பு பெற வேண்டும்? **(02 புள்ளிகள்)**

(ii) ஒரு நாடு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை கூறுக? **(04 புள்ளிகள்)**

(iii) இலங்கை தற்போது மேற்கொண்டுள்ள பிராந்திய மற்றும் இருபக்க தாராள வர்த்தக உடன்படிக்கைகளைக் குறிப்பிட்டு வர்த்தக ஒப்பந்தத்தினால் ஒரு நாட்டிற்கு கிடைக்கும் இரண்டு அனுகூலங்களையும் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

(iv) இலங்கையின் தாராள வர்த்தகக் கொள்கையின் பின் ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி விபரிக்குக? **(08 புள்ளிகள்)**

*09)* (i) சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு, நிதிக்கணக்கு ஆகியவற்றை வேறுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு தொடர்ச்சியாக பற்றாக்குறையை கொண்டிருப்பதன் விளைவுகளை விளக்குக? **(05 புள்ளிகள்)**

(iii) வெளிநாட்டுக்கடன் என்றால் என்ன? இலங்கையானது ஏன் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ளது? **(05 புள்ளிகள்)**

(iv) மிதக்கும் நாணய மாற்று வீத முறைமையின் கீழ் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் நிர்ணயிக்கப்படும் விதத்தைக் காட்ட பொருத்தமான வரைபடமொன்றை வரைக. இலங்கை ரூபாவின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக தேய்வதன் விளைவுகள் நான்கினை குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

*10)* (i) பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன? அதனை ஏற்படுத்தும் பிரதான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

(ii) பொருளாதக் கட்டமைப்பு என்றால் என்ன? நெடுங்கால பொருளாதார வளர்ச்சியினால் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றத்தினை தெளிவுபடுத்துக. **(05 புள்ளிகள்)**

(iii) சார்பு வருமானப் பரம்பல் என்றால் என்ன? அதில் ஏற்படும் மாற்றத்தினை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் எவை? **(05 புள்ளிகள்)**

(iv) பொருளாதார அபிவிருத்திக்காக பொருளாதார வளர்ச்சியுடன் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளை விபரிக்குக. **(05 புள்ளிகள்)**